## ஆசிரியரைப்பற்றி



இவர் இரட்சிக்கப்பட்டு, அபிஷேகம் பெற்றவுடன் தேசத்திற்காக ஜெபிக்க தன்னை அர்ப்பணித்தவர்.

ஒரு நாள் இரவு தரிசனத்தில் உனக்கு மனதுருக்கமாய் ஜெபிக்கும்படி வரம் தந்திருக்கிறேன் என்று வானத்திலிருந்து புறப்பட்டு வந்த கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டு ஊழியத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்தவர்.

இவரை கர்த்தர் சபைகளிலும் ஜெபக் குழுக்களிலும் பயன் படுத்தி வருகிறார்.

இவரைக் கொண்டு இன்றைக்கு பிரபலமாக இருக்கிற அனேக தேவ ஊழியர்களை கர்த்தர் எழுப்பியிருக்கிறார். அவர்கள் கர்த்தருக்கென்று வல்லமையாய் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

சகோதரர் அவர்கள் சிறிய வியாபாரம் செய்து கொண்டே இந்த ஊழியத்தை செய்து வருகிறார். வியாபாரம் செய்கிறவர்களையும் கர்த்தர் பயன்படுத்த முடியும் என்பதற்கு சகோதரர் ஓர் எடுத்துக்காட்டு. இவர் செய்து வருகிற ஊழியங்களுக்காகவும், இவருக்காகவும் ஜெபியுங்கள். கர்த்தர் உங்களோடு இருப்பாராக.


வெளியிடுவோர்

**GOSPEL MISSIONARY PRAYER FELLOWSHIP**
5/110, SAMYPURAM COLONY, SIVAKASI - 626189.
VIRUDHUNAGAR (Dist) (T.N) South India Cell : 94431 78673




# பாவத்தின் கொடிய வலையும் அதிலிருந்து விடுதலையும்

ஆசிரியர். A. பால்ராஜ்

# பாவத்தின் கொடிய வலையும், அதிலிருந்து விடுதலையும்

ஆசிரியர்
A.பால்ராஜ்

**அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். (ஆதி 3:6)**

# புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும் :

பிரியமானவர்களே, ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் என்று வேதம் சொல்கிறது. நம்முடைய பிதாவாகிய தேவன் ஆறு நாட்களும் கிரியை செய்து இந்த பூமியில் அவர் தமது மனவிருப்பத்தின்படி சகலத்தையும் செய்து முடித்து நிறைவு செய்தார் என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம்.

ஆனால், ஐந்து நாட்கள் செய்து முடித்த தம்முடைய கிரியைகளை ஆண்டு கொள்ள தகுதியுடையவன் மனிதன் என்று மனிதனையும் உண்டாக்கினார். அவர்களை ஆணும், பெண்ணுமாக உண்டாக்கினார் என்றும் பார்க்கிறோம்.

**"பின்பு தேவன்: நமது சாயலாகவும், நமது ரூபத்தின் படியேயும், மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊறும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்".**

**"தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி; நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக்கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசிர்வதித்தார்.**

**பின்னும் தேவன்; இதோ, பூமியின் மேல் எங்கும் விதைதரும் சகலவிதப்பூண்டுகளையும், விதைதரும் கனி மரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது"; (ஆதி.1: 26.27.28.29)** என்று தேவன் சொன்னார்.

அப்படியானால், தேவன் மனுஷனை சிருஷ்டிக்கும் முன்பே அவனுக்கு தேவை இன்னது என்று அறிந்து சரீரபிரகாரமாக அவனுக்கு தேவையானவைகளையெல்லாம் உண்டாக்கியிருக்கிறார் என்று அறிந்து கொள்ளுகிறோம். அதனால் தான் இயேசுவும், "**...நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்;" என்றார். (மத்தேயு 6:34)**

எனக்கன்பானவர்களே, நம்முடைய பிதாவாகிய தேவன் சகலத்தையும் உண்டு பண்ணின பின்பு, **"...தேவன் அது நல்லது என்று கண்டார்". (ஆதி.1:25) என்று வாசிக்கிறோம். "தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்.**

**தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி; "நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்". (ஆதி:2:15,16,17)**

கட்டளை என்பது சட்டம். மனிதன் அதை மாற்றக்கூடாது. பிரியமானவர்களே, தேவன் சகலத்தையும் உண்டு பண்ணின பின்பு, அது நல்லது என்று கண்டார் என்று வேதம் சொல்லும் பொழுது நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தையும்

மனிதனுக்கு (ஆதாமுக்கும், ஏவாளுக்கும்) அறிமுகப்படுத்துகிறதைப் பார்க்கிறோம்.

ஒருவேளை எல்லாம் நல்லது என்று கண்ட கர்த்தர் நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தையும், அதன் கனியையும் எதற்காக தோட்டத்தில் வைத்தார் என்றும், அதனால்தானே ஆதாம், ஏவாள் மூலமாக பாவம் எனக்குள்ளும் வந்துவிட்டது என்று அன்பான தேவனுடைய பிள்ளைகளே நீங்களும் கூட நினைக்கலாம். ஆனால், தேவன் தீமையானதைத் தோட்டத்தில் வைக்கவில்லை.

நன்மை எது, தீமை எது என்று மனிதன் சுயமாய் அறிந்து உணர்ந்து கொள்ளும்படியான சுபாவத்தைத்தான் நன்மை, தீமை அறியதக்க மரமும், கனியும் என்று எழுத்தின்படி சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிய வேண்டியதாய் இருக்கிறது.

தேவன், ஆதாமையும், ஏவாளையும், எல்லா சூழ்நிலையிலும் தம்மையே சார்ந்திருக்க வேண்டும் என்றே விரும்பினார். ஆகையால்தான் நன்மை, தீமை அறியும் சுபாவம் இல்லாமல் தம்முடைய வார்த்தைக்கு மட்டும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று அந்த கனியை புசியாமல் இருக்கும்படி சொன்னார்.

இந்த சம்பாஷணை நடக்கும் பொழுது தேவனும், ஆதாமும் ஏவாளும் மட்டுமே இருந்தார்கள் என்று அறிகிறோம். ஆனாலும், தள்ளப்பட்ட தூதனாகிய சாத்தானும் இந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. **அதற்க்கு வேதாகமம் நமக்கு விடை தருகிறது.**

**"பின்னொருநாளிலே தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்ற போது, சாத்தானும் அவர்கள் நடுவிலே கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றான்".** (யோபு.2:1) சாத்தான் நம் அருகில் நிற்கிறான் என்பதில்

நாம் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஆகையால்தான் பேதுரு எழுதும் போது **"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான்".(1 பேதுரு 5:8) என்று எழுதுகிறார்.**

## பிசாசின் வேலைகள் :

இச்சையின் காட்சிகளை பார்க்கச் செய்தல், அந்த காட்சிகளின் கற்பனைகளால் நம் இருதயத்தை நிரம்பச் செய்தல், அப்படியே சரீரத்தை உணர்வடையச் செய்து தன் ஆளுகைக்குள் கொண்டுவந்து நம்முடைய ஆவியை (சிந்தனைகளும், நினைவுகளும்) தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து நம்முடைய மனதை அவன் இஷ்டம் போல செயல்படுத்துதல் என்பதை நாம் அறிய வேண்டும். உதாரணமாக, நீங்கள் உங்கள் நண்பரிடமோ, அந்நிய ஒரு நபரிடமோ பேசிக்கொண்டிருக்கும் போது, உங்களிடம் பேசிக்கொண்டிருக்கும் நபர், என்னுடைய காலில் ஒரு ஆணி குத்திவிட்டது என்று சொல்லும் போது, உங்களின் காலில் ஆணி குத்தினது போல உணர்வு ஏற்படும். இப்படிதான் இச்சை வார்த்தைகளை நாம் கேட்கும் போதும் பாவம் நம்முடைய சரீரத்தில் கிரியை செய்கிறது.

பிசாசின் வேலை முதலாவது நம் எண்ணங்கள், சிந்தனைகள் மூலமாக வார்த்தைகளையும், கற்பனை காட்சிகளையும் நம் இருதயத்திற்குள் நிரப்புவதுதான். இவைகள்தான் நம்முடைய ஆத்துமாவை சாகடிக்க அவன் எடுக்கும் முதல் ஆயுதம்.

**"வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும்; அவைகளே**

**மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும்".** (மத்தேயு 15: 18,19)

இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்று இயேசு சொன்னார். ஏவாளிடத்தில் சாத்தான் பேசும் போது, அவள் சிந்தனையில் கற்பனைக் காட்சிகள் உருவாகும்படி செய்தான். புசிப்புக்கு ஏற்றதும், பார்வைக்கு இன்பமும் என்ற கற்பனைக் காட்சிகள் ஏவாளுக்குள் உருவானது. இதன்மூலமாக ஏவாளின் இருதயத்திற்குள் புகுந்து தன்னுடைய இராஜ்ஜியத்தை அங்கே ஸ்தாபித்துக் கொண்டான். இப்பொழுது ஏவாளின் முழு சரீரமும் சாத்தானின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. ஏவாளை தன் இஷ்டம் போல இயக்க ஆரம்பித்தான்.

எனக்கன்பான, வாலிப சகோதரனே, சகோதரியே இப்படித்தான் நம்முடைய வாழ்க்கையிலும் சாத்தான் இடைபட ஆரம்பிக்கிறான். **"...மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல. அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்".** (I. யோ. 2:16)

இன்றைக்கும் அனேகர் தங்கள் பார்வைக்கு அழகாய் தெரிகிறவைகளையெல்லாம் வாங்க வேண்டும் என்றும், அதை வாங்கி மற்றவர்களுக்கும் காண்பித்து மற்றவர்கள் எல்லோரைப் பார்க்கிலும் தங்களை உயர்ந்தவர்களாக காண்பிக்க வேண்டும் என்றும், தங்களைக் குறித்துத் தாங்களே பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். இது கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியிலும், இப்பொழுதும் நடந்து

கொண்டு தான் இருக்கிறது.

இப்படிப்பட்ட போலியான எண்ணங்களை மனிதர்களின் சிந்தனையில் ஊடுருவச் செய்து கிறிஸ்துவுக்கு விரோதமான செய்கைகளை நமது சரீரத்தின் மூலமாக செய்து முடிக்கிறான்.

இவைகளைப் போலவே வாலிபர்கள், வாலிபப் பெண்கள் வாழ்க்கையிலும் ஊடுருவி தன் வேலையைத் துவக்குகிறான். சாத்தான் எப்பொழுதுமே இடைதரகர் இல்லாமல் செயல்படுவதில்லை. அன்றைக்கு ஆதாம் பாவம் செய்வதற்கு ஏவாளை பயன்படுத்திய பழைய பாம்பாகிய வலுசர்ப்பம் என்னும் சாத்தான் இப்பொழுது தொலைக்காட்சி, செல்போன், வலைதளம் இவைகளைப் பயன்படுத்துகிறான். இவைகள் மூலமாக பாவத்தைத் தூண்டுகிறான். இதற்கு கவர்ச்சிகரமான பொருள்களையும் பயன்படுத்துகிறான். இவைகள் எல்லாம் சாத்தானின வேலைகள் என்பதை நாம் அறிய வேண்டும்.

எனக்கன்பான சகோதரனே, சகோதரியே உங்கள் கண்கள் கண்ட காட்சியை இருதயத்தில் ஏற்றுக்கொள்ளாதீர்கள். அதை இயேசுவின் நாமத்தில் கடிந்து அப்புறப்படுத்துங்கள்.

வேதம் சொல்கிறது : **"உன் இருதயத்திலே அவள் அழகை இச்சியாதே; அவள் தன் கண்ணிமைகளினால் உன்னைப் பிடிக்கவிடாதே".( நீதி. 6:25)**

நீங்கள் ஆண்களாயிருந்தாலும் சரி, பெண்களாயிருந்தாலும் சரி, எதிர் பாலினத்தவரை உங்கள் இருதயத்தில் வைத்து கற்பனை செய்து இச்சியாதிருங்கள். **"...இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்". (யாக். 1:15)**

வேதம் சொல்லும் மரணம் என்பது சரீரபிரகாரமான மரணம் அல்ல. அது ஆத்தும மரணம். **"...பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்"** என்கிறது வேதம். (எசேக். 18:4)

**"சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும், இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை".** (1 கொரி. 15:50).

ஆத்துமா மரித்துப்போனால், நித்தியத்தில் நாம் மோட்சத்தில் பிரவேசிக்க முடியாது என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது.

# புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாயிருக்கிறது என்று கண்டு :

பிரியமானவர்களே, இங்கே இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாயிருக்கிறது என்று கண்டு என்று வாசிக்கிறோம்.

தேவையில்லாத நபர்களை சந்திக்கும் போது நாம் விலகிக் கொள்ளவில்லையென்றால் நாம் தவறானவைகளை கற்றுக்கொள்ளவும், கற்றுக்கொள்வது மாத்திரமல்ல கற்றுக்கொண்டவைகளை செய்து பார்க்க வேண்டும் என்கிற எண்ணமும் நமக்குள் உருவாகிவிடும்.

**ஒரு சமயம் ஆண்டவர் எனக்கு தரிசனத்தை காண்பித்தார். தரிசனத்தில் நான் கண்ட காட்சி கிராமங்களில் உள்ள வயல் வரப்பின் மேல் நடந்து சென்று கொண்டிருக்கிறேன். போகிற வழியில் ஒரு பம்புசெட் ரூம் திறந்து கிடக்கிறது. அதை நான் உற்று கவனிக்கும் போது இச்சையைத் தூண்டும்விதமாக ஒரு பெண் நிற்கும் காட்சி தெரிகிறது. நான் இன்னும் அதிகமாக கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தவுடன் தூரத்திலிருந்து மூன்றுவித ரூபத்துடன் மூன்று அசுத்த ஆவிகள் மின்னல் வேகத்தில் என்னை நோக்கி ஓடி வருகிறதை ஆவியானவர் எனக்கு காண்பித்தார். நானும் சற்றும் யோசிக்காமல் இயேசுவின் நாமத்தில் அங்கேயே நில் என்று கட்டளை கொடுத்தேன். உடன் தானே அந்த அசுத்த ஆவிகள் என்னை நோக்கி முன்னேறி வரமுடியாமல் அப்படியே நின்றுவிட்டது. இப்படியாகக் கண்டேன்.**

**உடனே நான் ஜெபிக்க ஆரம்பித்தேன். தரிசனத்தின் விளக்கத்தை ஆண்டவரிடம் கேட்டேன்.**

**ஆவியானவர் அதன் அர்த்தத்தை விளக்கினார்.**

**ஒரு ஆணோ அல்லது பெண்ணோ மடிக்கணினியின் மூலமாகவோ, தொலைக்காட்சியின் மூலமாகவோ, செய்தித்தாள்கள் மூலமாகவோ அசுத்த காட்சிகளைப் பார்த்தல், செய்தித்தாள்கள் மூலமாக வருகிற இச்சையைத் தூண்டும் செய்திகளை வாசித்தல் இவைகளை நாம் செய்யும் போது பிசாசு அசுர வேகத்தில் நம்முடைய மனதில் புகுந்துவிடுகிறான் என்றார்.**

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே **"தடைகட்டப்படாத பாம்பு கடிக்குமே"** என்று வேதம் சொல்கிறது. (பிர. 10:11)

பிரியமானவர்களே நாம் அசுத்தக் காட்சிகளை பார்க்கிறதும், அசுத்த செய்திகளை வாசிக்கிறதும் தவிர்க்க முடியாதவைகளாக இன்றைக்கு சூழ்நிலைகள் மாறி வருகிறதை நாம் அறிவோம். ஆனாலும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய மனதில் ஏற்றுக் கொள்ளாதபடி இயேசுவின் நாமத்தில் என் மனதிலிருந்து வெளியே போ என்று இச்சையைத் தூண்டுகின்ற அசுத்த ஆவிகளுக்கு கட்டளை கொடுக்க வேண்டும்.

அப்பொழுது நம்முடைய மனதிலிருந்து அவைகள் வெளியேறிவிடும். பின்பு நம்முடைய மனதில் இயேசு கிறிஸ்துவே ஆளுகை செய்ய ஒப்புக் கொடுக்க வேண்டும். அசுத்த சிந்தனைகளை உடன் தானே வேத வசனத்தின் மூலமாகவும், இயேசுவின் இரத்தத்தினாலும் பரிசுத்த ஆவியானவரின் அக்கினியினாலும் கழுவும்படி நம்மை இயேசுகிறிஸ்துவிடம் ஒப்புக் கொடுக்க வேண்டும். அப்படி இல்லாத வாழ்க்கை பரிசுத்த ஜீவியத்துக்கு ஆபத்தாக முடியும் என்பதில் எந்தவித சந்தேகம் இல்லை.

இப்படித்தான் நம்முடைய ஆதி தாயாகிய ஏவாளும் சத்துருவாகிய சாத்தானை தன் மனது என்னும் ஏதேன் தோட்டத்திலிருந்து அப்புறப்படுத்த தவறியதால் இன்றைக்கு உலகம் முழுவதுமாக பாவத்துக்குள் கிடக்கிறது. புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சம் என்று தன் மனக்கண்களில் ஏவாள் கற்பனைக் காட்சியைக் கண்டதே மனித சந்ததி பாவிகளாக மாற காரணமாயிற்று.

கர்த்தருடைய பிள்ளைகள் மற்றும் ஊழியக்காரர்கள் ஒவ்வொருவருக்கும் தேவன் தந்த வேலைகளைச் செய்யாமல் வழி விலகி செல்லும் போது சாத்தான் நம்முடைய ஊழியங்களில், குடும்பத்தில், தொழிலில், வியாபாரத்தில், படிப்பில், பணி செய்கிற இடங்களிலும் இடைப்பட்டு அசுத்த சிந்தனைகளை கொடுக்கிறான். இச்சைகளை உண்டுபண்ணி பாவம் செய்யும்படி தூண்டுகிறான். பாவம் செய்த பின்பு தன் இஷ்டப்படி நம்மை அடிமைப் படுத்துகிறான். இப்படிப்பட்ட காரியம் தாவீதின் வாழ்க்கையின் மூலமாக நமக்கு ஒரு பாடமாக வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**"மறுவருஷம் ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படுங்காலம் வந்தபோது, தாவீது யோவாபையும், அவனோடே கூடத் தன் சேவகரையும், இஸ்ரவேல் அனைத்தையும், அம்மோன் புத்திரரை அழிக்கவும், ரப்பாவை முற்றிக்கைபோடவும் அனுப்பினான். தாவீதோ எருசலேமில் இருந்துவிட்டான்". (2 சாமு.11:1)**

யுத்தத்திற்கு தலைமையேற்று செல்ல வேண்டிய ராஜாவாகிய தாவீது சோம்பலாக எருசலேமில் இருந்துவிட்டபடியினால் தேவன் தனக்கு கொடுத்த பொறுப்பை தட்டிக் கழித்தபடியினாலே தாவீதுக்கு பாவம் செய்யும் வழியை சாத்தான் உண்டுபண்ணிக் கொடுத்தான் என்பதை நாம் அறிய வேண்டும்.

இப்படித் தான் கர்த்தருடைய வேலைக்காரர்களாகிய நாமும் ஜெபம் செய்வதற்கு சோம்பல்பட்டு உலக சினேகத்தில் நம்முடைய மனதை லயிக்கவிடும் போது, தேவனை மறக்கச் செய்து சாத்தான் தேவையில்லாத நபர்களை நம்மோடு ஐக்கியப்படுத்தி பாவம் செய்ய வாசலைத் திறக்கிறான்.

பிரியமானவர்களே, சாத்தான் திறக்கும் வாசலாகிய பாதாளத்திற்குள் போகாதபடிக்கு நமக்கு ஜெபம் மிக அவசியமாகிறது.

நாம் ஜெபித்தால்தான் கர்த்தர் நம்மைச் சுற்றி வேலியடைத்து சாத்தான் காட்டும் பாதையில் நாம் செல்லாதபடி நம்மை காத்துக் கொள்ள முடியும். தாவீது பாவம் செய்ய வேண்டும் என்று நினைக்கவில்லை. **"ஒரு நாள் சாயங்காலத்தில் தாவீது தன் படுக்கையிலிருந்து எழுந்து, அரமனை உப்பரிகையின் மேல் உலாத்திக் கொண்டிருக்கும்போது, ஸ்நானம்பண்ணுகிற ஒரு ஸ்திரீயை உப்பரிகையின்மேலிருந்து கண்டான்; அந்த ஸ்திரீ வெகு சௌந்தரவதியாயிருந்தாள்".(2 சாமு.11:2)**

தாவீது அந்த ஸ்நானம் பண்ணுகிற ஸ்திரீயை கண்டதிலிருந்து தன்னுடைய சிந்திக்கும் திறனை ஸ்நானம் பண்ணுகிற ஸ்திரீயின் மேல் வைத்து கர்த்தர் தன்னை அழைத்த அழைப்பையும், தன் மேல் வைத்த அபிஷேகத்தையும் மறந்து போனான். தவறு செய்கிறவர்களை தண்டிக்க வேண்டிய ராஜா தானே தேவனால் தண்டிக்கப்பட வேண்டியவனாக மாறிப்போனான்.

அன்பானவர்களே, தேவன் நமக்கு கொடுத்த அதிகாரத்தின் மேல் தேவனுடைய அதிகாரம் இருக்கிறது என்பதை நம்முடைய நினைவில் அடிக்கடி கொண்டு

வந்து நாம் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

அப்பொழுது தான் நம்முடைய ஆத்துமாவை கிறிஸ்துவுக்குள்ளாக காத்துக்கொள்ள முடியும். இப்படித்தான் ஏவாளும், தேவன் கொடுத்த பொறுப்பாகிய ஏதேன் தோட்டத்தின் நடுவில் இருந்த நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்ற தேவ கட்டளையை உதாசீனப்படுத்தினதாலே அந்த விருட்சத்தின் கனியை கூர்ந்து கவனிக்க வேண்டியதாயிற்று.

இதில் முக்கியமாக நாம் அறிய வேண்டியது ஆதாமும், ஏவாளும் பல நாட்கள் தோட்டத்தையும், அதிலுள்ள விருட்சங்களையும், அதிலுள்ள கனிகளையும், நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியையும் பார்த்திருந்தாலும், சாத்தான் (சர்ப்பம்) சொல்லும் போது, புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமாய் இருக்கிறது என்று கண்டாள் என்று பார்க்கிறோம்.

அன்பானவர்களே, இப்படித்தான் பாவத்தைக் குறித்து அதை செய்யக் கூடாது என்று ஒதுக்கித் தள்ளி பரிசுத்தமாய் வாழ்ந்து கொண்டிருந்தாலும், விருட்சங்களின் நடுவில் நன்மை, தீமை அறியக்கூடிய விருட்சம் இருப்பது போல பாவம் செய்கிற மனிதர்களின் ஆவிகளும், அதைச் செய்யத் தூண்டுகிற அசுத்த ஆவிகளும், பாவம் செய்யும்படிக்கு தேவ ஆவியைப் பெற்ற நம்முடனே போராடிக்கொண்டு தான் இருக்கிறது.

அன்றைக்கு போர் சேவகர்களோடு யுத்தத்தில் இருக்க வேண்டிய தாவீது உப்பரிகையில் தனியாக உலாவினபடியினாலே ஸநானம் பண்ணுகிற ஸ்திரீயைக் கண்டு அவள் அழகை தன் மனதில்

தியானித்ததினிமித்தம் அவளோடு பாவம் செய்ய அசுத்த ஆவிகளால் ஏவப்பட்டான்.

அது போலவே மனிதன் தனியாய் இருப்பது நல்லதல்ல என்ற தேவவார்த்தையை மீறி ஆதாமை விட்டு விலகி ஏவாள் தனியாக சென்றதாலே சாத்தானோடே (சர்ப்பத்தோடே) உரையாடல் செய்ய நேரிட்டது. அந்த உரையாடல் தான் நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை முழுமனதோடு கூர்ந்து காண நேரிட்டது என்று பார்க்கிறோம்.

பிரியமானவர்களே, கிறிஸ்துவுக்குள்ளாக ஒரு ஐக்கியம் நமக்குத் தேவை. இயேசு சொன்னார்: **"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். (யோ.17:21)"**

இயேசு ஜெபித்த ஜெபத்தைப் பாருங்கள். பிதாவும், குமாரனாகிய இயேசுவும் திரித்துவத்தில் ஒன்றாக இருப்பது போல், பரிசுத்த ஆவியானவர் மூலமாக நாம் ஒவ்வொருவரும் ஒன்றாக இணைந்து இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

# அதின் கனியைப் பறித்து புசித்து :

பிரியமானவர்களே, கனியைப் பறித்து புசிக்கிற காரியத்தில், சாத்தானுக்கும், ஏவாளுக்கும் மிகுந்த போராட்டம் நடந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**தேவன் ஏதேன் தோட்டத்தில் உள்ள எல்லா விருட்சங்கள் மேலும் உள்ள ஆளுகையை மனிதனுக்கு கொடுத்தார். "...ஆண்டு கொள்ளுங்கள்..." (ஆதி.1:28) என்றார் என்று பார்க்கிறோம்.**

எப்படியென்றால் நம்முடைய கையில் நிறைய பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த உலகத்தில் எந்த பொருட்களை வாங்க வேண்டும் என்றாலும் பணம் இல்லாமல் நாம் ஒன்றையும் கடைகளில் வாங்க முடியாது.

ஒரு கடையில் உள்ள ஒட்டு மொத்த பொருட்களையும் வாங்க தகுதியுள்ள பணம் நம்முடைய கையில் இருந்தால் அத்தனை பொருட்களையும் நாம் வாங்கிவிடலாம். கையில் பணம் இருந்தால் அவைகளை வாங்கும் அதிகாரத்தை அந்தப் பணம் நமக்கு கொடுக்கிறது.

அதைப் போலவே தோட்டத்தின் மத்தியில் இருக்கும் கனியைப் புசிக்கவும், புசியாமல் இருப்பதற்கும் அதிகாரத்தை தேவன் மனிதனுக்குக் கொடுத்தார். ஆனாலும் **"...அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்..." (ஆதி 2:17)** என்று ஒரு எச்சரிக்கையையும் மனிதனுக்குக் கொடுத்தார். அப்படியானால், புசிப்பதற்கும் ஏவாளுக்கு அதிகாரம் இருக்கிறது. புசியாமல் இருப்பதற்கும் அதிகாரம் தேவன் கொடுத்துவிட்டார்.

யோசேப்பின் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தைப்

பார்ப்போம். **"கர்த்தர் யோசேப்போடே இருந்தார். அவன் காரியசித்தியுள்ளவனானான்; அவன் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டிலே இருந்தான்". (ஆதி 39:2)**

**கர்த்தர் யோசேப்போடே இருந்தார் என்றால்** பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிறைந்திருந்தான் என்று நாம் அறிந்து கொள்கிறோம். எதையும் திறமையாய்ச் செய்யும் கிருபை அவனோடே இருந்தது. விவேகமாய் நடந்து கொள்ளும் ஞானமும் அவனுக்கு இருந்தது என்று பார்க்கிறோம். அடுத்த வசனம் சொல்கிறது, **"கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப் பண்ணுகிறார் என்றும், அவன் எஜமான் கண்டு; யோசேப்பினிடத்தில் தயவுவைத்து, அவனைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டானயாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்". (ஆதி 39:3.4)**

இவ்வார்த்தையின்படி யோசேப்புக்கு எஜமான் வீட்டின் பொருட்களின் அனைத்தின் மேலும் அதிகாரமிருந்தது. அதிகாரமில்லாதது ஒன்றுமில்லை என்று அறிந்து கொள்கிறோம். யோசேப்புக்கு அவனுடைய எஜமான் வீட்டில் எங்கும் போகலாம், எப்பொழுது வேண்டுமானாலும் போகலாம் என்ற உரிமையை அவனுடைய எஜமான் கொடுத்துவிட்டான்.

யோசேப்பு தேவனால் பிறந்தவன் (தேவ அபிஷேகம் பெற்றவன்) என்பதால், சாத்தான் தன்னுடைய யுத்தத்தை போத்திபாரின் மனைவியின் மூலமாக யோசேப்புக்கு எதிராக துவக்க ஆரம்பித்தான்.

வேதம் சொல்லுகிறது : **"தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான்".** (1 யோ.3:9) எப்பொழுதும்

தேவனுடைய வார்த்தைக்கு எதிராய் சாத்தான் யுத்தம் பண்ணுவான் என்பதை மறக்கவே கூடாது. **"ஆகையால், அவன் தனக்கு உண்டானதையெல்லாம் யோசேப்பின் கையிலே ஒப்புக்கொடுத்துவிட்டு, தான் புசிக்கிற போஜனம் தவிர தன்னிடத்திலிருந்த மற்றொன்றைக்குறித்தும் விசாரியாதிருந்தான். யோசேப்பு அழகான ரூபமும் சௌந்தரிய முகமும் உள்ளவனாயிருந்தான். சிலநாள் சென்றபின், அவனுடைய எஜமானின் மனைவி யோசேப்பின் மேல் கண் போட்டு, என்னோடே சயனி என்றாள்". (ஆதி 39:6.7)**

**"அவள் நித்தம் நித்தம் யோசேப்போடே இப்படிப்பேசிக்கொண்டுவந்தும், அவன் அவளுடனே சயனிக்கவும், அவளுடனே இருக்கவும் சம்மதிக்கவில்லை". (ஆதி. 39:10)**

அன்பானவர்களே, அப்படியானால் யோசேப்பின் மனதிலே, ஆவியானவருக்கும், சாத்தானுக்கும் பெரும் போராட்டமே நடந்திருக்கும்.

தேவனுடைய திட்டம் யோசேப்பின் மூலமாக செய்துமுடிக்க வேண்டியது இருந்ததால் போத்திபாரின் மனைவி மூலமாக யோசேப்பை பாவத்துக்குட்படுத்த சாத்தான் முயற்சித்தான். ஆனாலும், யோசேப்பு, கர்த்தர் தனக்குக் கொடுத்த சொப்பனத்தை உணர்ந்து, கர்த்தர் தன்னை உயிரோடு காத்து வருகிறது, தன்னை ஒரு நாள் எல்லோருக்கும் மேலாக உயர்த்துவார் என்ற விசுவாசத்தோடு பாவத்தை எதிர்த்து ஜெயம் கொண்டான். வெற்றியின் ரகசியம் இதுதான். தன் மனதில் ராஜ்ஜியம் செய்ய கர்த்தருக்கே இடம் கொடுத்தான். ஆகையால் சாத்தான் யோசேப்பின் மனதிலிருந்து விலகி ஓடிப்போனான். ஆனால் ஏவாளோ, தன் மனதிலிருந்து சாத்தானை விலக்க சம்மதிக்கவில்லை.

அவனுடைய பேச்சு அவளுக்கு மிக இனிமையாகவும், உண்மை போலவும் இருந்தது மாத்திரமல்ல, தேவனைவிட சாத்தானே நல்லவன் என்ற எண்ணத்தினால் நிரப்பப்பட சாத்தானின் வார்த்தையை தன் இருதயத்திற்குள் நிரம்பும்படி இடம் கொடுத்தாள். "...**அதின் கனியைப் பறித்து, புசித்தாள்**". (ஆதி. 3:6)

புசித்தாள் என்ற வார்த்தையின் பொருள் இருதயத்தில் ஏற்றுக் கொண்டாள், அனுபவித்தாள், ருசி பார்த்தாள் என்று ஆவியின்படி நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

தாவீதைக் குறித்து : **"…. அந்த ஸ்திரீ வெகு சௌந்தரவதியாயிருந்தாள். " ( 2 சாமு 11.2)**

**"அப்பொழுது தாவீது, அந்த ஸ்திரீ யார் என்று விசாரிக்க ஆள் அனுப்பினான். அவள், எலியாமின் குமாரத்தியும், ஏத்தியனான உரியாவின் மனைவியுமாகிய பத்சேபாள் என்றார்கள். அப்பொழுது தாவீது ஆள் அனுப்பி அவளை அழைத்து வரச்சொன்னான்; அவள் அவனிடத்தில் வந்த போது, அவளோடே சயனித்தான்…" (2. சாமு 11:3.4)**

இங்கே தாவீதைக் குறித்தும், ஏவாளைக் குறித்தும் நாம் வாசிக்கும் போது, இரண்டுக்கும் ஒற்றுமையுள்ளது. ஆனால், யோசேப்போ புசிக்கவில்லை. இருதயத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை. அனுபவிக்கவில்லை.

**"இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத் தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை; இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்". (ஆதி.39:9)**

யோசேப்போ தேவன் என்னைக் கவனிக்கிறார். அவர் என்னோடு இருக்கிறார். என் அருகில் நிற்கிறார். அவர் எனக்குள் இருக்கிறார் என்று உணர்ந்து அறிந்திருந்ததினால் அவன் பாவம் செய்யவில்லை.

பிரியமானவர்களே, வேதம் சொல்லுகிறது **"உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே. வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே". (1 கொரி.6:15.16)**

**பிரியமானவர்களே. பாவத்துக்கு விலகி ஓடுங்கள் !**

**உங்களை பரிசுத்தமாய் காத்துக் கொள்ளுங்கள் !.**

அன்பான சகோதரனே, சகோதரியே, மதுகுடிக்கும் பழக்க முடைவர்கள் தாங்கள் குடித்து சரீரத்தைக் கெடுக்கிறது மாத்திரமல்ல மற்றவர்களையும் குடிக்கும்படி வற்புறுத்திக் குடிக்கச் செய்து, மற்றவர்களையும் நிரந்தர குடிகாரர்கள் ஆக்கிவிடுவார்கள்.

அதுபோலவே, புகைபிடிக்கும் பழக்கமுடைவர்களும் தாங்கள் புகைபிடித்து கெட்டுப் போவதுமல்லாது மற்றவர்களையும் அதற்கு அடிமையாக்கிவிடுவார்கள். கஞ்சா, அபின் இப்படி பல போதை வஸ்துக்களுக்குப் பழக்கமுடைவர்களும் இப்படியே. இப்படி பலவகை கெட்டப் பழக்கங்களையும் சொல்லலாம்.

போதை ஊசி போட்டுக்கொள்ளுதல், போதை மாத்திரைகளை உபயோகிக்கிறவர்களும் இப்படிதான். தான் கெட்டுப் போவதுமல்லாமல் மற்றவர்களையும் கெடுப்பார்கள். அதுபோலவே திருடுதல், கடத்தல் தொழில் செய்கிறவர்கள், கோள் சொல்லுகிறவர்கள், விபச்சாரம் செய்கிறவர்கள் இவர்களோடு பழகினாலும், தங்களைப் போலவே மற்றவர்களையும் மாற்றிவிடுவார்கள்.

நாம் இவர்களின் வெளித்தோற்றங்களைப் பார்த்து இவர்கள் பொல்லாதவர்கள் என்று நினைக்கிறோம். ஆனால் இவர்களை இயக்குவது சாத்தானும், அவனுடைய தூதர்களுமே.

இதைப்போலவே ஆவிக்குரிய வாழ்க்கையில் பின் மாற்றம் அடைந்தவர்கள் மற்ற கர்த்தருடைய பிள்ளைகளை சோர்வடையும்படியாக பேசுவார்கள்.

வேதம் சொல்லுகிறது : **"...ஆவியானவர்**

**வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்".** (1 தீமோத். 4:1)

பிரியமானவர்களே, பரிசுத்த ஆவியானவர் வெளிப்படையாகவே பேசுகிறார். ஆவியானவர் தன்னுடைய ஊழியர்களையும், தன்னுடைய விசுவாசிகளையும் தான் சொல்லுகிறார். சாத்தான் கர்த்தருடைய பிள்ளைகளை கெடுக்க யாரையும் பயன்படுத்த முடியும். பேதுருவை இயேசுவை மறுதலிக்க பயன்படுத்தினான். (மத்.26:72)

வேதம் சொல்வதை கவனியுங்கள். **"அத்தருணத்தில் பேதுரு வெளியே வந்து அரமனை முற்றத்தில் உட்கார்ந்திருந்தான். அப்பொழுது வேலைக்காரி ஒருத்தி அவனிடத்தில் வந்து; நீயும் கலிலேயனாகிய இயேசுவோடே கூட இருந்தாய் என்றாள்." (மத்.26:69)**

**அதற்கு அவன்: "நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது என்று எல்லாருக்கும் முன்பாக மறுதலித்தான்." (மத் 26:70)**

**அவன், வாசல் மண்டபத்திற்குப் போன பொழுது வேறொருத்தி அவனைக் கண்டு: "இவனும் நசரேயனாகிய இயேசுவோடேகூட இருந்தான் என்று அங்கே இருந்தவர்களுக்குச் சொன்னாள்.: " (மத் 26:71)**

**"அவனோ அந்த மனுஷனை நான் அறியேன் என்று ஆணையிட்டு, மறுபடியும் மறுதலித்தான்". (மத் 26:72.) சற்று நேரத்திற்குப் பின்பு அங்கே நின்றவர்கள்**

**பேதுருவினிடத்தில் வந்து: "மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன்; உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது என்றார்கள்." (மத். 26:73)**

**"அப்பொழுது அவன் : அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான். உடனே சேவல் கூவிற்று." (மத் 26:74)**

யூதாசை சற்று வித்தியாசமாக இயேசுவை காட்டிக் கொடுக்க சாத்தான் பயன்படுத்தினான். யூதாசைக் குறித்துப் பார்க்கும் போது, பேதுருவைவிட இன்னும் ஒருபடி மேலே நின்று செயல்பட்டான் என்று பார்க்கிறோம்.

**"அவர் அப்படிப் பேசுகையில்** ஜனங்கள் கூட்டமாய் **வந்தார்கள். அவர்களுக்கு முன்னே பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் என்பவனும் வந்து, இயேசுவை முத்தஞ் செய்யும்படி அவரிடத்தில் சேர்ந்தான்." (லூக்.22:47)**

**''இயேசு அவனை நோக்கி: யூதாசே, முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக் கொடுக்கிறாய் என்றார்." (லூக்.22:48)**

எனக்கன்பானவர்களே, இயேசுவின் இந்த அன்பான குரலை கவனியுங்கள். இயேசு நினைத்திருந்தால், அந்தக் கூட்டத்தையும், யூதாசையும் உடனே அழித்துவிட முடியும். ஆனால், அவர் பிதாவின் அன்பை அந்த இடத்தில் வெளிப்படுத்தினார்.

**"தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; "தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவான்?." (1 யோ. 4:20)**

**"......அன்பில்லாதவன் தேவனை அறியான்" என்று**

**வேதம் சொல்லுகிறது (1 யோ. 4:8) யூதாசின் அன்பு நம்பிக்கை துரோகமானதாக இருந்தது.**

அன்பானவர்களே, ஒருவன் தான் இரட்சிக்கப்பட்ட ஆரம்பத்தில் இருந்த விசுவாசத்தை இழக்க ஆரம்பிக்கும் போது, தேவ அன்பு அவனிடமிருந்து தானாகவே விலகிவிடுகிறது. அவனே அதற்கு காரணமாகிறான். ஆனால், தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பு என்றும் மாறாதது.

வேதம் நமக்கு கொடுக்கும் எச்சரிக்கை குரல்: **"உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும், அன்பு கூராதிருங்கள்; "ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை." (1 யோ. 2.15)**

ஏனெனில், **"மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல. அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்." (1 யோ. 2.16)**

**"உலகமும் அதின் இச்சையும், ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்." (1 யோ. 2.17)**

**நான் ஊழியத்திற்கு வந்த நாட்களில் எனக்கு ஒரு தரிசனத்தைக் கர்த்தர் காண்பித்தார். நான் கண்ட விதம், அந்த நாட்களில் கர்த்தருக்கென்று வைராக்கியமாய் ஊழியம் செய்த ஊழியக்காரர் ஒருவரைக் காண்பித்தார். அவர் மெயின் ரோட்டில் நடந்து சென்று கொண்டிருக்கிறார். ஆனால், அவருடைய இரண்டு கண்களில் உள்ள பார்வைகளும், நாம் குனிந்து நடக்கும்பொழுது, எப்படி தரையை மட்டும் பார்க்கமுடிகிறதோ, அதுபோல அவருக்கு**

**தரையிலுள்ளவைகளை மட்டும் தான் பார்க்க முடிகிறது. ஆனால் அவர் குனிந்து நடக்கவில்லை.நேராகவே பார்த்து நடந்து கொண்டிருந்தார். அதைக் குறித்து அவருக்கு எந்த கவலையும் இல்லை. இப்படிக் கண்டேன் :**

**மறுநாள், அதை நினைத்து தியானித்து ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தேன். அப்பொழுது, ஆவியானவர் இவன் பரலோகத்தைக் குறித்த நினைவே இல்லாமல், பூமிக்குறியவைகளையே சிந்திக்கிறான் என்றார். ஆகையால், இவனுக்காக ஜெபம் பண்ணு என்றார்.**

**நான் ஜெபம் பண்ணி அந்த ஊழியரை கர்த்தரிடம் ஒப்புக்கொடுத்தேன். பின்பு, ஒரு நாள் தற்செயலாக அந்த ஊழியக்காரர் என்னை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார். அவர் என் பக்கத்தில் வந்தவுடன் பரிசுத்த ஆவியானவர் என்மேல் இறங்கி அவரோடு பேசும்படி ஏவினார். வெளிப்படுத்தல். 3:2ன் படி "நீ விழித்துக் கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிற-வைகளை ஸ்திரப்படுத்து; உன் கிரியைகள் தேவனுக்கு முன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை, என்று சொல்லச் சொன்னார். நானும் தைரியமாய்ச் சொல்லிவிட்டேன். அவர் மனம் வருந்தி கர்த்தருக்குள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டார். அல்லேலூயா !**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, இயேசு நம்மேல் அன்புள்ளவராக இருக்கிறதினாலே, நம்மை அன்புடனும், உரிமையுடனும் சிட்சித்து தம்முடன் சேர்த்துக் கொள்கிறார். **"....தேவன் அன்பாகவே இருக்கிறார்." (1 யோ. 4:8)**

சகல அடிமைத்தனத்திலிருந்தும் நம்மை விடுதலை செய்பவராக வேதம் இயேசுவை நமக்கு அறிமுகப்படுத்துகிறது.

**"கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிஷேசத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்." (ஏசா 61:1)**

நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் ஊழியத்தில் இந்த வார்த்தை முழுமையானதாக நிறைவேறியது. நம்முடைய மீட்பர் இயேசுவுக்கு வார்த்தை என்ற பெயருண்டு. பிதாவின் இருதயத்திலிருந்து புறப்பட்டு வந்த வார்த்தை தான் இயேசு. **"இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே." (வெளி. 19:13)**

**"சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை." (யோ 1:3)**

**அந்த வார்த்தையின் மூலமாகவே (இயேசுவின்) இந்த உலகத்தில் எல்லாம் உண்டாயிருக்கிறது என்று அறிகிறோம். "ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது." (யோ 1:1)**

பிரியமானவர்களே, தேவன் நித்தியவாசி எனப்படுபவர். துவக்கமும் அவரே, முடிவும் அவரே. தேவனுக்குள் வார்த்தையாக உருவானவரே இயேசு கிறிஸ்து.

இயேசுவே தேவனுடைய இருதய சிந்தனையில் வார்த்தையாக உருவாகி, தேவன் சொல்லச் சொல்ல இந்த உலகத்தில் சகலத்தையும் உண்டாக்கி முடித்தவர். தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தையே இயேசு கிறிஸ்து. அவரைக் குறித்து இன்னும் பார்க்கப் போனால்;

**''ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிற-வைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது." (கொலோ.1:16,17)**

**காணப்படுகிறவைகள் மேலும் காணப்படாதவைகள் மேலும் முழு அதிகாரம் பெற்றவர். இயேசு சொன்னார் : "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்." (யோவான் 14:13.14)**

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என் நாமத்தினாலே எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் என்று சொல்லிவிட்டார்.

ஆனால் அதில் ஒரு நிபந்தனையையும் சொல்லியிருக்கிறார். குாரானாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக பிதாவானவர் மகிமைப்பட வேண்டும். அதுதான் அந்த நிபந்தனை.

இயேசு கிறிஸ்துவின் மூலமாக பிதா மகிமைப்படாத எந்தக் காரியமாயிருந்தாலும் பரலோகத்தில் பங்கில்லை என்பது தெளிவு.

வேதம் சொல்லுகிறதை கவனியுங்கள்: **"இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்குக் அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது." (ஏசா.59:1.2).**

இரட்சிப்பு என்ற சொல்: சிறைப்பட்டவனை விடுதலை செய்து அவனுக்கு தேவையான சகல நன்மைகளையும் உண்டாக்கிக் கொடுத்து, அவன் உயிரோடிருக்கும் நாட்களெல்லாம் பாதுகாத்துக்கொள்ளுதல்.

அன்பானவர்களே, இரட்சிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கை குறுகிப் போகவில்லை என்று வாசிக்கிறோம். நம்முடைய ஜெபங்களையும், விண்ணப்பங்களையும், துதிகளையும், ஸ்தோத்திரங்களையும், கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை என்று வேதம் சொல்கிறது.

தேவனுக்கும், நமக்கும் உள்ள உறவில் விரிசல் உண்டாக காரணமே நம்முடைய அக்கிரமங்கள் தான் என்று வேதம் தெளிவுபடுத்துகிறது.

மேலும், முழு இருதயத்தோடும், முழுமனதோடும், முழு பெலத்தோடும், தேவன் மேல் அன்பு கூர்ந்து ஜெபிக்க முடியாத காரணம் நம்முடைய பாவமே என்று உணர வேண்டும்.

நம்முடைய பாவம் தான் நாம் தேவனின் முகத்தைப் பார்த்து ஜெபிக்கமுடியாதபடிக்கு மறைக்கிறது.

சாத்தானின் இராஜ்ஜியமே இருள். **“தேவன் ஒளியாயிரு க்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை.”( 1 யோ 1:5)**

**“அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது. இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.” ( யோ 1:5)**

பிரியமானவர்களே, மனிதர்களாகிய நாம் எல்லோரும் உடனே அற்புதம் நடக்க வேண்டும் என்று நினைக்கிறோம். அதற்காக, பல இடங்களுக்குச் சென்று பல ஊழியர்களிடமும் ஜெபம் பண்ணுகிறோம். ஆனாலும், அங்கே அசைவாடிக் கொண்டிருக்கிற இயேசுவைத் தேடாமல் ஊழியக்காரர்கள் முகத்தைத் தேடுகிறதினாலேயே விடுதலையையும், அற்புதங்களையும் பெறமுடியாமல் வெறுமனே திரும்புகிறோம்.

நாம் ஊழியர்களிடம் ஜெபம் பண்ண தொடங்கின உடனேயே இயேசு அந்த இடத்தில் பிரசன்னமாகிறார் என்பதை நாம் அறிய வேண்டும்.

**ஒரு சமயம் இயேசுவை அறியாத ஒரு தாயார், பனிரெண்டு வயதிற்குட்பட்ட தன் மகளைக் கூட்டிக் கொண்டு எங்கள் வீட்டிற்கு ஜெபம் பண்ண வந்திருந்தார்கள். கூடவே சுமார் இருபத்தோரு வயது மதிக்கத்தக்க ஒரு வாலிபனும், இருபத்தி மூன்று வயது மதிக்கத்தக்க ஒரு வாலிபனும் சேர்ந்து மொத்தமாக நான்கு பேர் வந்திருந்தார்கள்.**

**நான் சொந்த அலுவல் காரணமாக அந்தச் சமயத்தில் வீட்டில் இல்லை. நான் வரும் வரைக்கும், சுமார் அரை மணி நேரம் அவர்களும் காத்து**

இருந்தார்கள்.

நான் வந்தவுடன் உற்சாகமாக எழுந்து என் மகளுக்கு சுகமில்லை நீங்கள் ஜெபம் செய்தால் சுகமாகிவிடும் என்று சொன்னார்கள். அதனால் தான் இங்கு வந்தோம் என்று சொன்னார்கள்.

நான் உடனே ஜெபம் பண்ணவில்லை. வீட்டின் உள்ரூமுக்குப் போய் முழங்கால்படியிட்டு ஜெபித்தேன். உடன் தானே பரிசுத்த ஆவியானவர் என்னோடு பேசினார். முதலாவது சுவிசேஷத்தை அவர்களுக்கு பிரசங்கம் செய்து இயேசுவின் மீது அவர்களுக்கு விசுவாசம் உண்டாகும்படி செய் என்றார்.

நான் ஆவியானவர் சொன்னபடியே சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்து, ஜெபம் பண்ணி ஆவியானவர் மூலமாக அவர்களுடைய சிந்தனைகளை கூர்ந்து கவனித்தேன். மீண்டும் ஆவியானவர் சொன்னார்: ”இயேசுவை தெய்வமாக ஏற்றுக்கொள்ள இன்னும் அவர்களுக்கு விசுவாசம் உண்டாகவில்லை. ஆகையால், நீ அவர்களுக்கு இன்னும் ஒரு வாய்ப்புக் கொடு. ஆனால், இயேசுவை கடவுளாக உங்கள் மனதிலே ஏற்றுக்கொள்ள உங்களுக்கு விருப்பமில்லையென்று இயேசு சொல்கிறார் என்று ஒரு வார்த்தை மட்டும் சொல்லிவிடு என்றார்.”

ஆவியானவர் சொன்னபடியே நான் அவர்களிடம் சொன்னேன். இப்பொழுது அவர்களுடைய இருதயம் இயேசுவை ஏற்றுக்கொள்ள திறந்திருப்பதை ஆவியானவர் மூலமாக அறிந்து கொண்டேன். உடனே பரிசுத்த ஆவியானவர் என்னுடைய சிந்தனை முழுவதையும் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டார். பரிசுத்த ஆவியானவர் என் மூலமாக

அவர்களிடம் பேச ஆரம்பித்தார்..

அம்மா உங்கள் வீட்டுக்கு விலையேறப்பெற்ற பரிசுப் பொருட்களை இலவசமாக கொடுப்பதற்காக யாராவது ஒரு நபர் வீட்டுக்கு முன்பாக வந்து நின்றால் வேண்டாம் என்று திருப்பி அனுப்பிவிடுவீர்களா? அல்லது வீட்டிற்குள் வரச்சொல்லி பொருட்களை வாங்கிக் கொள்வீர்களா என்றேன்.

உடனே வேண்டாம் என்று திருப்பி அனுப்பமாட்டோம் பொருட்களை வாங்கிக் கொள்வோம் என்று இரண்டு வாலிபர்களும், அந்தத் தாயாரும் சொன்னார்கள். அந்த சிறு பெண் மட்டும் சுகவீனத்தின் நிமித்தமாக மயக்கநிலையில் படுக்க வைக்கப்பட்டிருந்தாள்.

நான் சொன்னேன் : அழிந்து போகிற பரிசுப் பொருட்களுடன் நிற்கும் அந்த நபரை வீட்டிற்க்குள் அழைப்போம் என்கிறீர்கள். ஆனால், என்றைக்கும் அழியாத நித்திய இரட்சிப்பும், உங்கள் மகளுக்கு இருக்கும் வியாதியிலிருந்து அற்புத விடுதலையையும் கொண்டு வந்திருக்கிற இயேசுவை உங்கள் (வீட்டிற்குள்) இருதயத்திற்குள் அழைக்க மனமில்லையா என்றேன்.

இந்த வார்த்தையை கேட்ட உடனே கண்ணீர்விட்டு கதறி அழுதார்கள். என் மகளுக்கு சுகம் கொடுக்க இயேசு எனக்குள் வரவேண்டும் என்றார்கள். நான் அவர்களிடம் உங்கள் பாவங்களை இயேசுவிடம் சொல்லி மன்னிப்பை பெற்றுக் கொள்ளுங்கள். அவர் சிந்தின இரத்தத்தினால் உங்களை கழுவச் சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டு, வியாதியுள்ள சிறு பெண்ணுக்காக ஜெபித்து, பிள்ளை சரீரத்திலிருந்து வியாதியை விலகிப் போகும்படி கட்டளை கொடுத்து, ஏசா 53:5ம் வசனத்தை

**சொல்லி வியாதியை இயேசு சுமந்து கொண்டார். இப்பொழுதே பிள்ளை சரீரத்திலிருந்து விலகி போ என்றேன்.**

**உடன் தானே தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவள் போல திடுக்கென்று எழுந்து தண்ணீர் கேட்டாள். தண்ணீர் கொடுத்துப் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு போனார்கள்.**

**மறுநாள் என்னிடம் வந்தார்கள். மகளுக்கு எப்படி இருக்கிறது என்று கேட்டேன். அவர்கள் சொன்னார்கள், ஜெபம் பண்ணி சென்ற பின்பு அந்த நோயின் தாக்கம் பிள்ளைமேல் வரவே இல்லை என்று அந்த தாயார் சொன்னார்கள், ஆஸ்பத்திரியில் மூன்று நாட்களாக பெட்டில் மகளை வைத்திருந்தோம். பெட் வாடகை, மற்றும் ஆஸ்பத்திரி பீஸ் கொடுக்க முடியவில்லை என்று அங்குள்ள டாக்டர் பிள்ளையை கொண்டு போங்கள் என்று சொல்லிவிட்டார். இப்பொழுது தான் ஆஸ்பத்திரிக்கு போய் கணக்குப் பார்த்து ரூபாய் கொடுத்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு சந்தோஷமாக சென்றார்கள்.**

**பரிசுத்த ஆவியானவர், இந்தக் காரியத்தில் எனக்கு ஒரு காரியத்தை அறிந்து கொள்ளச் செய்தார். அந்தத் தாயாருக்கு பிறருடைய பணத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இல்லாததால் தான் மறுநாள் டாக்டரிடம் சென்று ஆஸ்பத்திரிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுப்பதில் உண்மையாய் இருந்தார்கள்.**

**இந்த உண்மையான இருதயத்தைப் பார்த்து தான் கர்த்தரும் மகளுக்கு அற்புத சுகத்தைக் கொடுத்தார் என்று அறிந்து கொண்டேன்.**

இயேசு கிறிஸ்துவின் ஊழிய நாட்களில் இயேசு பேதுருவை சந்தித்த விதம் இராத்திரி முழுவதும் கடலில்

பிரயாசப்பட்டு வலையைப் போட்டும் ஒன்றும் அகப்படவில்லை என்று சொல்லிவிட்டு, ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன்.... (லூக் 5:5) என்று வேண்டா வெறுப்பாக எனக்கு விருப்பமில்லை ஆனாலும், இயேசு சொல்லிவிட்டார். கீழ்படிந்து செயல்படவில்லையென்றால் அவர் ஏதாவது நினைத்துக் கொள்வார் என்ற நினைப்போடு ஒரு கடமைக்காகத் தான் படகை ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய் வலையைப் போட்டிருப்பார். அப்பொழுது வலை கிழிந்து போகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். (லூக் 5:6)

பேதுரு அதிர்ந்து போனார். இவர் எப்படிப்பட்டவரோ? நாமோ வேண்டா வெறுப்போடு வலையைப் போட்டோம். இவ்வளவு மீன்களா? தண்ணீருக்குள் இருக்கும் மீன்களை அடையாளம் கண்டு சரியாய் வலையைப் போடச் சொன்னவர். என்னுடைய வாழ்க்கையில் மறைந்திருக்கும் பாவங்களை கண்டு கொள்ளுவாரோ என்று பயந்தார். பயந்தது மாத்திரமல்ல "இயேசுவின் பாதத்தில் விழுந்து; **"ஆண்டவரே நான் பாவியான மனுஷன்," என்று பாவங்களை அறிக்கை செய்தார்" (லூக் 5:8).**

எனக்கன்பானவர்களே, நான் பாவி என்று ஒத்துக் கொண்டபடியினால் பேதுருவை இயேசு புறக்கணித்து தள்ளவில்லை. மாறா**க ".....பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்." (லூக் 5:10)**

பிரியமானவர்களே, இயேசு நாம் பாவி என்று ஒருபோதும் நம்மை தள்ளி விடுகிறவர் அல்ல . பேதுரு அற்புதத்தைப் பெற்றுக்கொண்டது மட்டுமல்ல புதிய

மனிதனாகவும் மாறினார்.

**“ஒரு ஓய்வு நாளில் அவர் ஜெப ஆலயத்தில் போதகம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்பொழுது பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள்.**

**இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து: ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்று சொல்லி, அவள் மேல் தமது கைகளை வைத்தார் : உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள். (லூக் 13:10.11.12.13)**

ஜெப ஆலயத் தலைவனோ ஓய்வு நாளில் ஜனங்களை வியாதியிலிருந்து விடுதலை செய்யக் கூடாது என்று சொல்லும் போது உங்களிடத்திலுள்ள எருது அல்லது கழுதை இவைகளுக்கு அவைகளுடைய கட்டுகளை அவிழ்த்து தண்ணீர் காட்டுகிறதில்லையா? என்று அவர்களுடைய அறிவீனத்தை உணர்த்தி **“இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வு நாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்துவிட வேண்டியதில்லையா என்றார். (லூக் 13:16)**

பலவீனப்படுத்துகிற ஆவியினாலேயே இவள் கூனியாயிருக்கிறாள் என்று இயேசு சொன்னார். மேலும் இவள் ஆபிரகாமின் குமாரத்தி என்றும் சொல்லுகிறார்.

ஆபிரகாமின் சந்ததியென்றால் அவள் ஒரு விசுவாசி என்று அறியமுடிகிறது. அதனால் தான் அவள் தேவாலயத்திற்கு வந்திருக்கிறாள்.

ஒரு விசுவாசி பலவீனப்படுத்துகிற ஆவியினாலோ, பிசாசின் மூலம் வருகிற எந்த வியாதியினாலோ கட்டப்பட்டிருப்பது தேவனுடைய சித்தமல்ல என்பது

தெளிவாகிறது.

ஆனால் அப்போஸ்தலனாகிய பவுலுக்கும் ஒரு பலவீனம் இருந்தது. அது கர்த்தரால் அனுமதிக்கப்பட்ட பலவீனம். தேவனே அவருடைய சரீரத்தில் அந்த பலவீனத்தை அனுமதித்தார் என்கிறார். தேவன் தனக்குத் தந்த கிருபையை மதிக்காமல் தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளக்கூடாது என்பதற்காகவே அனுமதித்தார் என்றும் சொல்லுகிறார். அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருந்தது என்கிறார்.

**"அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டேன்.**

**அதற்கு அவர் : என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்." (II கொரி 12:7.8.9)**

பவுல் சொல்லுவது ஊழியத்தில் கர்த்தருடைய வல்லமை வெளிப்படுவதைக் குறித்து எழுதுகிறார். **"அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே, பலமுள்ளவனாயிருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும், நான் பிரியப்படுகிறேன்." (II கொரி. 12:10)**

சரீர பலவீனமும், நிந்தைகளும், நெருக்கங்களும், துன்பமும், இடுக்கண்களும் என்னை கிறிஸ்துவில் அதிகமாக கிட்டிச்சேர உதவுகிறது. இப்படிப்பட்ட வேளையில் நான் மாம்சத்தின்படி செயல்படாமல், இயேசுவின் முகத்தையே அதிகமாக தேடுவதால், இயேசுவின் உயிர்த்தெழுந்த வல்லமை என்னிலிருந்து அதிகமாக புறப்படுவதால் நான் அதில் பிரியப்படுகிறேன் என்று எழுதுகிறார்.

சாத்தானால் கட்டப்பட்டிருந்த கூனியாகிய அந்த ஸ்திரீ கண்டிப்பாக கட்டவிழ்க்கப்பட வேண்டும். ஆனால் பவுல் சொல்லுவது என்னுடைய சரீரபிரகாரமான வாழ்க்கை செயல்பாடுகள் அனைத்தையும் கிறிஸ்துவில் சிலுவையின் மரணத்திற்குள் ஒப்புக் கொடுத்ததினாலேயே அவருடைய மரணத்தை என்னுடைய சரீரத்திலே சுமந்து திரிகிறேன் என்கிறார்.

அவருடைய மரணத்தை என் சரீரத்திலே தரித்துக் கொண்டபடியால் கிறிஸ்துவின் வல்லமை என்மூலமாக வெளிப்பட உயிரோடே எழுந்த அவருடைய சரீரத்திலும் இணைந்திருக்கிறேன். ஆகையால், இந்த உலகம் என்னை கட்டுப்படுத்தாது என்று தெளிவாய் சொல்லுகிறார்.

கலாத்தியர் 6:14 சொல்வதைக் கவனியுங்கள். அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது. ஆகையால், உலகம் என்னை சிறைபடுத்த முடியாது. நான் அதிலிருந்து முழுவதும் விடுதலையாகிவிட்டேன் என்று உறுதியாக சொல்லுகிறார். இயேசுவும் என்னுடைய இராஜ்ஜியம் இவ்வுலகத்துக்குரியது அல்ல என்றார்.

பிரியமானவர்களே, நாமும் இப்படிப்பட்ட சிந்தனையை தரித்துக் கொண்டால் உலகத்தை

ஜெயிக்கலாம். **“ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தின வருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்.**

**(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாகியிருக்கிறது.“ (கொலோ 1:12.13.14)**

நமது பாவங்களை அறிக்கை செய்து, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட்ட நிச்சயம் நமக்கிருந்தால், உலகம், மாமிசம், பிசாசு மூன்றையும் நாம் ஜெயிக்கிறோம்.

**“இதோ, சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன் ; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது” (லூக் 10:19)** என்ற வார்த்தை ஒவ்வொரு தனிமனிதன் மூலமாகவும் நிறைவேறும்.

அன்பான சகோதரனே, சகோதரியே இப்படிப்பட்ட விடுதலையின் ஊழியங்களை கர்த்தருக்காக செய்ய வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஆனால், பிசாசு, இச்சையின் ஆவிகள் மூலமாக என் மனதில் குற்ற உணர்வுகளை ஏற்படுத்தி தடைகளை கொண்டு வருகிறானே என்று வேதனைப்படுகிறீர்களா?

வேதம் சொல்லுகிறது : **“நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனசாட்சியைச் செத்த கிரியை களறச் சுத்திகரிப்பது**

**எவ்வளவு நிச்சயம்" (எபி 9:14)**

**"ஆதலால் பிள்ளைகள், மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்.**

**ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத் தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்." (எபி 2:14.15)**

எனக்கன்பான சகோதரனே, சகோதரியே இயேசுவே நமக்காக எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டார். இரட்சிக்கப்பட்டேன். ஆனாலும், அதில் நிலைநிற்க முடியவில்லையே என்று நீ வேதனைபட்டுக் கொண்டிருக்கலாம்.

இந்த உலகத்தின் அசுத்தங்களின் ஊடாய் கடந்து போகிற நாம் எப்பொழுதும் சிலுவையிலே இயேசு சிந்தின இரத்தத்தினால் கழுவப்பட அவரிடம் நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முடியும் என்பது நிச்சயம்.

**' . . .நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்என்று நான் உனக்குச் சொல்லவில்லையா...." (இயேசு) (யோ 11 : 40)**

**" . . .நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் "(1 யோ 5:4)**

எனக்கன்பான சகோதரனே. சகோதரியே இந்தப் புஸ்தகத்தில் உள்ள ஒவ்வொருவார்த்தைகளையும் நீ வாசித்த பொழுது கர்த்தர் உன்னோடு பேசியிருக்கிறார்.

உனக்குள் மறைவாய் இருந்த அனேக தவறுகளை கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளார். இப்பொழுதே, சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் இயேசுவிடம் உன் விருப்பத்தை சொல்லிவிடு. சாத்தான் மூலம் உனக்கு போடப்பட்டிருக்கும் கைவிலங்கும், கால் விலங்கும், இயேசுவால் உடைக்கப்படுகிறது.

**“... உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்...”** (லூக் 13:12)

# ஒப்புக் கொடுத்தல் மற்றும் நன்றி செலுத்தும் ஜெபம் :

அப்பா பிதாவே, உலகின் பாவங்களை சுமந்து தீர்க்க உம்முடைய சொந்த குமாரனாகிய இயேசுவை எனக்காகவும், இந்த உலகத்தில் அனுப்பித் தந்தீர். என்னுடைய மீறுதலின் நிமித்தம் அவர் காயப்பட்டார். என்னுடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். எனக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் நான் குணமாகிறேன். பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் என்னை விடுதலையாக்கினீரே அதற்காய் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம் கேளும் பிதாவே ... ஆமென்.

